தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,
மயிலாடுதுறை

பு.த.சா.1

நாள் 11.09.2025

| STC. No. | 166/2025 | | |
|---|---|---|---|
| பெயர் | அனிதா ரோஸ்லின் மேரி | க/பெ. | ஜான்ஸ் ஸ்டீபன் |
| வயது | 46 | தொழில் | JOINT DIRECTOR OF INDUSTRIAL SAFETY & HEALTH |
| கிராமம் | RASIPURAM | தாலுக்கா | RASIPURAM |

(எதிரி ஆஜர், ).

சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டது.

முதல் விசாரணை :-

நான் தற்போது இணை இயக்குநர், தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துறையில் ஈரோட்டில் பணிபுரிகிறேன். திருவாரூர் தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார துணை இயக்குநராக பணிபுரிந்தபோது 04.10.2023 அன்று செய்தி வாயிலாக மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி வட்டம், தில்லையாடி கிராமத்தில் சர்வே எண். 400/2A1 ராமதாஸ்பையர்வேர்க்ஸ் என்ற பெயரில் இயங்கி வந்த பதிவு பெற்ற தொழிற்சாலையில் வெடி விபத்து ஏற்பட்டதை கேள்விபட்டு, அன்றைய தினமே இரவு 7.00 மணிக்கு சம்பவம் இடம் சென்று ஆய்வு செய்தேன். அந்த என் ஆய்வின் போது அந்த விபத்தில் நான்கு தொழிலாளர்கள் பேர் இறந்துவிட்டனர், நான்கு தொழிலாளர்களுக்கு கொடுங்காயம் ஏற்பட்டது. பின்பு, அந்த தொழிற்சாலையை ஆய்வு செய்தபோது அதில் தொழிற்சாலைகள் சட்டத்தில் உள்ள நிபந்தனைகளை மீறி செயல்பட்டது ஆய்வின் மூலம் தெரியவந்தது. அந்த தொழிற்சாலையில் 1. பிரிவு 41 தொழிற்சாலைகள் சாட்டத்தின் கீழ் இரசாயன கலவை அறையில் இரண்டு பேர் மட்டும் அனுமதிக்கப்படவேண்டும், ஆனால் 4 பேர் அனுமதிக்கப்பட்டுள்ளனர், 2. பிரிவு 88 உ/இ 96 (1) (2) விதிகளின் கீழ் விபத்து நடந்த 12 மணி நேரத்தில் படிவம் 18 சமர்பிக்கவேண்டும். ஆனால் சமர்பிக்கவில்லை. 3. பிரிவு 87 உ/இ 95 அட்டவணை 24 இனம் எண்.10(n) தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழ் 55 வயதிற்கு மேற்பட்டவரை

CJM, MAYILADUTHURAI.

அபாயகரமான பணியில் நியமிக்கக்கூடாது என்பதை மீறி செயல்பட்டுள்ளார். 4. பிரிவு 87 உ/இ 95 அட்டவணை 24 இனம். எண். 3(f) தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழ் உற்பத்தி அறையில் 3 மி.மி தடிமம்கொண்ட இரப்பர் சீட் போடவேண்டும். ஆனால் போடாமல் மீறியுள்ளார். 5. பிரிவு 87 உ/இ 95 அட்டவணை 24 இனம். எண். 10(d) தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழ் எல்லா கதவுகளுக்கும் கீழ் டோர் மேட் போட வேண்டும். ஆனால் போடாமல் மீறியள்ளார். 6. பிரிவு 87 உ/இ 95 அட்டவணை 24 இனம். எண். 4(2) தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழ் மரத்தடியில் தொழிலாளர்களை பணி செய்ய சொல்லி அனுமதித்து சட்டத்தை மீறியுள்ளார். 7. பிரிவு 6 (1) (d) உ/இ 6 (1) (2) (3) தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழ் 9 தொழிலாளர்கள் மட்டும் பணிபுரிய அனுமதி பெற்றுவிட்டு 13 தொழிலாளர்கள் பணிபுரிய அனுமதித்து விதியை மீறியுள்ளார். 8. தொழிலாளர் சட்டம் பிரிவு 4(1) (b) (ii) ன் கீழ் வருகை பதிவேடும் மற்றும் சம்பள பதிவேடு படிவம் 3 ன் படி பராமரிக்கப்படவில்லை என்று தெரிய வந்ததின் பேரில் அந்த இடத்திலேயே ஆய்வறிக்கை தயார் செய்தேன். அந்த ஆய்வறிக்கை **அ.சா.ஆ.1** ஆகும். பின்பு என் விசாரணை பேரில் ராமதாஸ்பையர்வேர்க்ஸ் உரிமையாளர் திரு. வி. மோகன் என்று தெரியவந்தது. அவரிடம் 13.10.2023 அன்று காரணம் கோரும் அறிவிப்பை அனுப்பி வைத்தேன். அதற்கு பதில் 06.12.2023 அன்று பெறப்பட்டது. அந்த காரணம் கோரும் கடிதம் **அ.சா.ஆ.2** ஆகும், ஒப்புகை அட்டை **அ.சா.ஆ.3** ஆகும். எதிரி கொடுத்த பதில் அறிவிப்பு **அ.சா.ஆ.4** ஆகும். நான் விடுமுறையில் இருந்த காரணத்தினால் என் பணியில் முழு கூடுதல் பொறுப்பு வகித்த ராஜேஷ் துணை இயக்குநர், எதிரி மோகனின் பதில் ஏற்றுக்கொள்ளதக்கதாக இல்லை என்று கூறி அவர் மீது மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்து அறிவிப்பு ஒன்று அனுப்பினார். அந்த அறிவிப்பு **அ.சா.ஆ.5** ஆகும். தனிமுறையீடு செய்வதற்காக அனுமதி வேண்டி வழக்கு முன்மொழிவு பேரணை தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்குநருக்கு 15.12.2023 அனுப்பப்பட்டது. அந்த கடிதம் **அ.சா.ஆ.6** ஆகும். அந்த கடிதத்தை பரிசீலனை செய்து 21.12.2023 அன்று தொழிலக பாதுகாப்பு மற்றும்

CJM, MAYILADUTHURAI.

166



சுகாதார இயக்குநரால் அனுமதி வழங்கப்பட்டது. அந்த அனுமதி உத்தரவு **அ.சா.ஆ.7** ஆகும். பின்பு, இவ்விபத்தால் இறந்த திரு.பா. மாணிக்கம், திரு. மதன், திரு. ராகவன், திரு. நிகேஷ் ஆகியோரின் பிரேத பரிசோதனை சான்றிதழ் துணை இயக்குநரால் பெறப்பட்டது. அந்த பிரேத பரிசோதனை சான்றிதழ்கள் முறையே **அ.சா.ஆ.8** முதல் **அ.சா.ஆ.11** ஆகும். இந்த விபத்தால் காயமடைந்த திரு.பக்கிரிசாமி, திரு. மாசிலாமணி, திரு. மாரியப்பன் ஆகியோரின் காயச்சான்றிதழ் துணை இயக்குநரால் பெறப்பட்டது. அந்த காயச்சான்றிதழ்கள் முறையே **அ.சா.ஆ.12** முதல் **அ.சா.ஆ.14** ஆகும். பின்பு, இவ்விபத்து குறித்து விசாரணை மேற்கொண்டு பொறையார் காவல்நிலைய ஆய்வாளர் குற்ற எண். 207/2023, பிரிவு 286,337, 304 (2) இதச வின் கீழ் மற்றும் 9 (B) (1) (a) இந்திய வெடி பொருள் சட்டத்தின் கீழ் 04.10.2023 அன்று வழக்கு பதிவு செய்யப்பட்டது. அந்த முதல் தகவல் அறிக்கை நகல் **அ.சா.ஆ.15** ஆகும். பின்பு, துணை இயக்குநர் ராஜேஷ் எதிரியின் மீது தொழிற்சாலைகள் சட்டம் 1948 மற்றும் தமிழ்நாடு தொழிற்சாலை விதிகள் 1950, (1) Sec. 87 r/w Rule 95 Schedule XXIV Part 3(f), (2). Sec.87 Rule 95 Schedule XXIV part 10 (d), (3) Sec. 4(1) b (ii) ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டது.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> :–

(எதிரி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க எதிரி தரப்பு குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.)

<u>மறு விசாரணை</u> :–

இல்லை.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்து காண்பித்து அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.

11/9/25

தலைமை குற்றவியல் நீதிபதி,
மயிலாடுதுறை.

CJM, MAYILADUTHURAI.